

மக்கள் தொலைக்காட்சியின் 'தமிழோடு விளையாடு' நிகழ்ச்சியில் சமூகப்பணித் துறை மாணவர்களும், உளவியல் துறை மாணவர்களும் உற்சாகமாகப் பங்கேற்றனர். ஊடகம் தன் பதின்மூன்றாம் ஆண்டு விழாவில் (06.09.2018) நிகழ்ச்சியை ஒளிபரப்பியது குறிப்பிடத்தக்கது. இந்தத் தமிழ் விளையாட்டில் கிருஷ்ணா வேங்கடராமனும், மௌளீஸ்வரனும் பரிசு பெற்றனர்.

‘சமூகப்பிரச்சினைகளுக்கு எதிராகக் குரல் கொடுப்பது பயனுடையதா? பயனற்றதா?’ என்ற தலைப்பில் மாணவர்கள் பங்கெடுத்த பட்டிமன்றம் கல்லூரி வளாகத்தில் உள்ள மொழிக்கூடத்தில் 21.08.2018 அன்று காலை 10.00 மணியளவில் இனிது நடந்தேறியது. நடுவர் முதல் நோக்கர் வரை அனைவரும் மாணவர்களே என்பது கூடுதல் செய்தி. சமூகத்தின் அவலங்களும் சிக்கல்களும் அதற்கான தீர்வுகளும் விவாதத்தின் பொருளாயின.

